வட்டார பயிற்சி பட்டறைக்கு Moderator-ஆக PDG.Lion S.Surendran MJF அவர்கள் மிக எளிய முறையில் கருத்துக்களை பகிர்ந்தார்கள். RC & ZC Guidance Lion Er.Subbiah, மண்டலத் தலைவர் Lion K.Nagarajan மற்றும் PST Guidance Lion Subbiah MJF வாழ்த்துரை வழங்கினார்கள். இந்த வருடம் நமது மாவட்டத்தில் 4 வட்டாரத் தலைவர்களும் இணைந்து நடத்திய முதல் பயிற்சி பட்டறை, அதற்கு வட்டாரத்தலைவர்கள் நால்வருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது மண்டலத்தின் Regional Leadership Development Seminar வரும் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமையன்று Sivakasi Cosmos Hall-ல் வைத்து நடைபெற இருக்கின்றது. சங்க முத்தலைவர்கள், Club Admin மற்றும் IVP அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி!



## District 324A -34th Cabinet Officers Installation (Perfect year)

*Lion P.Sudhakaran*



நமது மாவட்டத்தின் 34-வது அமைச்சரவை பதவி ஏற்பு விழா நிகழ்ச்சியானது 30.07.2023 அன்று கோவில்பட்டியில் உள்ள ஆர்த்தி மஹாலில் காலை 9.30 மணியளவில் காலை சிற்றுண்டி மற்றும் HOPES (Hunger, Optical, Pediatrics cancer, Environment, Sugar) சேவைகளுடன் நமது மாவட்ட ஆளுநர் Lion.Dr.D.Francis Ravi MJF அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைப்பதற்காக பன்னாட்டு இயக்குனர் PMJF Lion.R.Mathanagopal அவர்களும், சிறப்பு பேச்சாளராக Mohamed Riaz அவர்களும் வருகை புரிந்து சிறப்பித்தார்கள். வாழ்த்துரை வழங்குவதற்காக முன்னாள் ஆளுநர்களும் வருகை புரிந்திருந்தார்கள். விழாவின் ஏற்பாடுகளை MJF Lion.J.Suresh Thangarayappan (Lions Club of Tuticorin) Steering Committee Chairperson மற்றும் Co-chairperson MJF Lion. P.Arumugasamy (LC of Tuticorin), Lion C.Murugesh (LC of Kovilpatti Temple City) சேர்ந்து சிறப்பாக செய்திருந்தார்கள்.

முறைப்படி கொடிவணக்கம், Lions Prayer, உலக அமைதிக்காக ஒரு நிமிட மௌனம், அரிமா இளைஞர் உறுதிமொழி, சங்க குறிக்கோள் மற்றும் லயன்ஸ் அறநெறி வாசிக்கப்பட்டது. பின் மாவட்ட முதல் பெண்மணி MJF Lion F.Pramila Ravi அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தார்கள்.

நமது மாவட்ட ஆளுநரின் இந்த ஆண்டின் சாதனைத் திட்டத்தைப் பற்றியும் ஆளுநர் தம்பதியிரையும் அவைக்கு அறிமுகம் செய்த வைத்தார் லயன்.C.Rajan அவர்கள். ஆளுநர் தன்னுடைய உரையில், இந்த ஆண்டின் நிரந்தர சேவைத் திட்டமான குற்றாலத்தில் கட்டவிருக்கும் சொந்தக் கட்டிடத்தில் மாவட்ட Convention நடக்கும், அதில் International President மற்றும International Director கலந்து கொள்வார்கள் என்று கூறினார். தன்னுடைய இலவசத் திருமணத்

திட்டத்தைப் பற்றியும் விளக்கிக் கூறினார். நமது மாவட்டத்தின் திட்ட வளர்ச்சிக்கு அனைவரும் உதவுமாறு அன்போடு வேண்டுகோள் விடுத்தார்.

International Director PMJF Lion. R.Mathanagopal அவர்கள் நமது International President Dr. Patti Hill அவர்களின் Mission 1.5 பற்றி விரிவாகக் கூறினார், மேலும் நமது ஆளுநர் அந்த திட்டத்திற்கு “Each one Catch one” என்று பரிந்துரைத்து IP Dr. Patti Hill-யிடம் இருந்து பாராட்டுப் பெற்றதைச் சுட்டிக் காட்டினார். மும்பையில் வரும் ஜனவரி மாதத்தில் நடக்கவிருக்கும் சமூகச் சேவைக்கான GIVE மாநாட்டில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். பின்பு மாவட்ட அமைச்சரவை பொறுப்பாளர்களை முறைப்படி சிறப்பாக பதவியில் ஏற்கச் செய்தார். பொறுப்பேற்றுக்கொண்டதன் அடையாளமாக, முன்னாள் ஆளுநர்களின் முன்னிலையில், உடனடி முன்னாள் ஆளுநர் PMJF Passion Lion.Dr.N.K.Viswanathan அவர்கள், அதிகாரத்தின் சின்னமான சுத்தியலை ஆளுநர் MJF Lion Dr.D.Francis Ravi அவர்களிடம் ஒப்படைத்தார்.




மாவட்டத்தின் Website launch செய்யப்பட்டது, அத்துடன் e-directory-யும் நமது International Director அவர்கள் வெளியிட்டார்.



நமது சங்கம் சார்பாக இந்த நிகழ்வில் பங்கேற்க 51 நபர்கள் பதிவு செய்தோம். ஆளுநர் முன்னிலையில் நமது சங்கத்தின் சேவைத் திட்டமாக Laptop. Spectacles, Hearing aid and children's supportive equipments கொடுத்தோம். முன்னாள் ஆளுநர்கள் வாழ்த்துரை வழங்க அமைச்சரவை பதவி ஏற்பு விழா சிறப்பாக நடைபெற்று நிறைவு பெற்றது.

# ✡ ஜூலை மாதத்தின் இரண்டாவது கூட்டம் ✡

***Lion Renuga Muthukumaran***



26.07.2023 அன்று நமது சங்கத்தின் பொதுக்குழுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. Tail Twister லயன் ரேணுகா தேவி முத்துக்குமரன் நடத்திய விளையாட்டுப் போட்டியோடு கூட்டம் உற்சாகமாக ஆரம்பமானது. கொடி வணக்கத்தை லயன் அருண்குமாரும், லயன்ஸ் பிராத்தனையை லயன் தீபா அருண்குமார் அவர்களும் வாசித்தார்கள். உலக அமைதிக்கா ஒரு நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

சங்கத்தலைவர் லயன் K.பிரபாகர் வரவேற்புரையை வழங்கினார். செயலாளர் லயன் P.நித்தியபாண்டி தன்னுடைய செயல் அறிக்கையை வாசித்தார். IPP லயன் P.வாசியப்பன் MJF சென்ற வருடம் நமது சங்கம் பெற்ற 22 விருதுகளை உறுப்பினர்கள் முன் காட்சிப்படுத்தினார்.

**சிறப்பு விருந்தினர் :** அன்றைய சிறப்பு விருந்தினர் IPDG Passion லயன் N.K.விஸ்வநாதன் PMJF அவர்களை லயன் D.பிரபாகரன் PMJF அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர் “என் அரிமா, என் பெருமை” என்ற தலைப்பில் சிறப்பு உரையாற்றினார்.

நமது சங்க உறுப்பினர்கள் லயன் D.பிரபாகரன் PMJF, லயன் P.வினோத்கண்ணா MJF, லயன் S.வாசியப்பன் MJF, லயன் சிவபிரான், லயன் சிவசுப்பிரமணியன், லயன் M.ராமமூர்த்தி மற்றும் லயன் MJF E.A.E.T.S.செண்பகராஜன் ஆகியோர்களின் சிறப்பான செயல்பாடுகளைப் பாராட்டினார். பசிக்கு உணவு திட்டம் இந்த ஆண்டும் வெற்றிகரமாக தொடர்வதை குறிப்பிட்டார். தோழமை உணர்வுடனும், ஒருமித்த கருத்தோடும் சமுதாயப் பணிகளை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**புதிய உறுப்பினர்கள் :** நமது சங்கத்தில் இணைந்த 3 புதிய உறுப்பினர்களுக்கு முன்னாள் தலைவர் லயன் P.வினோத்கண்ணா MJF Indoctrination செய்து வைத்தார். புதிய உறுப்பினர்களை நமது



சங்கத் தலைவர் அறிமுகம் செய்து வைத்தார். அவர்களுக்கு நமது சிறப்பு விருந்தினர் Induction செய்து வைத்தார்கள். புதிய உறுப்பினர்கள் லயன் P.ஷகீலா, லயன் K.K.விஜய் அருண், லயன் V.செல்ல நிவ்யா நமது சங்கத்தில் இணைந்தார்கள்.

**சங்கத்தின் முதல் இதழ் :** நமது சங்கத்தின் முதல் Jewel இதழை Bulletin Editor Lion Deepa Sudhakaran எழுத நமது சிறப்பு விருந்தினர் வெளியிட்டார். முன்னாள் தலைவர் லயன் M.ராமமூர்த்தி அதை பெற்றுக் கொண்டார்.

**சேவைத்திட்டங்கள் :** அன்றைய தினம் எட்டு சேவைகள் சிறப்பு விருந்தினர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது.

இம்மாதம் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் லயன்ஸ் உறுப்பினர்களுக்கு லயன் தீபா அருண்குமார் வாழ்த்துக்களை தெரிவித்தார். அவர்கள் நமது சங்கத்தின் சார்பாக கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தார்கள். Tail



Twister Award வழங்கப்பட்டது. Early Bird Award-ஐ லயன் T.S.விவேகானந்தன் அவர்கள் வழங்கினார். லயன் P.சுதாகரன் நன்றியுரை வழங்க கூட்டம் இரவு விருந்துடன் இனிதே நிறைவு பெற்றது.




LIONS CLUB









# August Month First Regular Meeting

***Lion. Bhavani Sudhir***



சிலு சிலு என்று காற்று வீச

துளித் துளியாய் வான்மழை பொழிய

09.08.2023 அன்று Tail Twister லயன் ரேணுகா முத்துக்குமரனின் விளையாட்டுடன் ரம்யமான சூழலில் சரியாக 7.25 மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. Flag Salutation-ஐ லயன் சித்ரா குணசேகரன் அவர்களும், Lions Prayer-ஐ லயன். பாஸ்கரன் அவர்களும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் அமைதி காக்கப்பட்டது.




அவையினர் அனைவரையும் தலைவர் லயன். K.பிரபாகர் வரவேற்று உரையாற்றினார். இந்த மாதம் நடந்த சேவைகளைப் பற்றி செயலாளர் Lion.P.Nithya Pandi விரிவாக கூறினார்.

சிறப்பு விருந்தினர் Mrs. Sadhana Dharmaraj அவர்களை தனக்குரிய தனி நடையில் சிறப்பாக சிறப்பு விருந்தினரை அவைக்கு அறிமுகப்படுத்தினார் Lion. Radhigadevi Murugaiyan.

"The Art of Giving" என்ற தலைப்பில், நமது சிறப்பு விருந்தினர் உரையாற்றினார். சேவைத் திட்டமாக இரண்டு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. பிறந்தநாள் மற்றும் திருமணநாள் வாழ்த்துக்களை Lion. Deepa Arunkumar தெரிவித்தார். Tail Twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. Early bird award Lion. Arunkumar, Lion. Deepa Arunkumar அனைவருக்கும் வழங்கி மகிழ்ந்தார்கள். பொருளாளர் லயன். சுதாகரன் அவர்கள் நன்றியுரை கூற, இனிய விருந்தோம்பலுடன் கூட்டம் நிறைவு பெற்றது.



# A Trip to VEMBAR and Our Interclub Meeting with LC of Tuticorin

*Lion Preamalatha Balasubramanian*



13.08.2023 அன்று காலையில் 5.30 மணிக்கு நமது Junior School-லில அனைவரும் ஒன்று சேர்ந்து தேநீர் அருந்திய பின் நமது President ஏற்பாடு செய்திருந்த பேருந்தில் பயணம் இனிதாக ஆரம்பமானது. சுமார் 8.00 மணி அளவில் வேம்பாரில் உள்ள ஹேப்பி ஹோட்டலில் நமது சங்க உறுப்பினர் லயன் ஜெயசங்கர் ஏற்பாடு செய்திருந்த காலை உணவை அருந்திவிட்டு, வேம்பார் கடலில் சிறிது நேரம் விளையாடினோம்.

சுமார் 11.30 மணியளவில் தூத்துக்குடி P.O.P.Hall-ல் நடைபெற இருந்த Inter club Meeting-க்கு நமது சங்கம் உறுப்பினர்கள் 36 பேர் கலந்து கொண்டனர்.

Lions Prayer, Flag Salutation-னுடன் தொடங்கிய நிகழ்ச்சியில் தூத்துக்குடி அரிமா சங்கத் தலைவர் திரு.ராஜ்குமார் வரவேற்புரை வழங்கினார். PDG Lion Dr.P.N.கதிரேசன் MJF சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தூத்துக்குடி அரிமா சங்கத்தைச் சேர்ந்த லயன் தில்லை சிதம்பரம், தூத்துக்குடி அரிமா சங்க வரலாற்றை நினைவு கூர்ந்தார். 22.02.1959-ம் ஆண்டு பட்டயத்தலைவர் ரங்கசாமி நாடார் அவர்களால் தொடங்கப் பெற்று சிறப்பாக செயலாற்றி வருகிறது.

21 புதிய அரிமா சங்கங்களைத் தோற்றுவித்துள்ளது. இன்று அரிமா சங்கத்திற்காக ரூ.40 லட்சம் செலவில் புதிய கட்டடம் திறக்கப்பட்டுள்ளது. 1992-93-ல் Lion.Dr.P.N.K. கதிரேசன் MJF அவர்களும, தொடர்ந்து Lion. SKSC P Lion POP. ராமசாமியும் மாவட்டத்தில் ஆளுநராகப் பவனி வந்தனர். பல முறை மாவட்ட மாநாடுகள், மண்டல மாநாடுகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் நடத்தப்பட்டன. 64 வருடங்கள் வெற்றி

நடைபோட்டு வரும் சங்கத்தின் நிர்வாகத்தை தலைவர் Lion. Rajkumar, செயலாளர் Lion. Suresh, பொருளாளர் Lion. Jese Samuel இந்த ஆண்டு திறம்பட நடத்தி வருகின்றனர் என்று தில்லை சிதம்பரம் அவர்கள் தூத்துக்குடி அரிமா சங்கத்தின் பெருமைகளை எடுத்துரைத்தார்.

சிவகாசி அரிமா சங்கத்தின் வரலாற்றை Past President வினோத்கண்ணா எடுத்துரைத்தார். 1961-ம் ஆண்டு சிவகாசியில் மாவட்ட ஆளுநர் Lion T.சுந்தரவேல் செட்டியார் அவர்கள் துவக்கி வைக்க தலைவர் Lion செண்பகமூர்த்தி, செயலாளர் Lion N.P.S.S.நடராஜ நாடார், பொருளாளர் Lion A.வைரப்பிரகாசம் MJF அவர்களால் பொறுப்பேற்கப்பட்டது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கிற்கு இணங்க அன்று முதல் இன்று வரை கல்வி வளர்ச்சியிலும், சமுதாய வளர்ச்சியிலும், கிராமப்புற வளர்ச்சியிலும், ஊனமுற்றோர் நலத்திலும், நிரந்தரத் திட்டங்களிலும் மாவட்டமே போற்றும் வகையில் எங்களது சங்கம் நிறைவான நிலையான புகழைப் பெற்றுள்ளது எங்களது சங்கத்தால் என்று பேசினார்.



சிவகாசி அரிமா சங்க உறுப்பினர் திருமதி.சித்ரா குணசேகரன், தியாகராஜர் கீர்த்தனையும், திருமதி.பிரேமலதா பாலசுப்ரமணியன் எழுதிய தேசபக்தி பாடலையும் பாடி மகிழ்வித்தனர். இதோ அந்த பாடல் வரிகள்

**தேசிய ஒற்றுமை  ஆகஸ்ட் 15**

ஸாரே ஜஹான்ஸெ அச்சா (மெட்டு)

தேசிய ஒற்றுமை காண்போம்,

தேசத்தின் பெருமையைக்காப்போம், காப்போம்

மலர்கள் பலவகை மலர்ந்தாலும்

மாலையாய் இணைந்தே மணம் வீசும்

ஓர் ஆலமரத்தின் நிழலில்

பண் பாடிடும் பறவைகள் நாமே நாமே

இனம் மொழி மதம் வேறானாலும்

இந்தியர் எனும் குலம் நாமே

ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோம்

என்றும் பிரிவின்றி வாழ்வோம் நாமே நாமே



அடுத்து இரு சங்க உறுப்பினர்களும் அறிமுகம் செய்து கொண்டனர். நிகழ்ச்சியில் சிவகாசி அரிமா சங்கத்தின் சேவையாக 10 கி. அரிசிப் பைகள் Deaf and Dumb School - க்கு வழங்கப்பட்டது. திரு.கதிரேசன் அவர்கள் தனது உரையில், நதி யானையைப் பார்ப்பது போல சிவகாசி அரிமா சங்கம் உற்சாகத்தைத் தரும். நன்றியுடையவனாக இரு, நன்றியை எதிர் பாராதே "மனிதர்கள் சந்திப்பதை விட மனங்கள் சந்திக்கட்டும். சிவகாசி அரிமா சங்கம் பொழுது போக்கும் சங்கடமெல்லா பழுது பார்க்கும் சங்கம், திருப்பதி போல சிவகாசியின் பெயர் பொருத்தம், உழைப்பு, நேர்மை, சுறுசுறுப்புக்கு பெயர் பெற்றது என்று நயம்படக் கூறினார்.




நமது சங்கத்தலைவர் Lion K.பிரபாகரன் அவர்கள் Inter district, Interstate and Inter National Meeting நடத்துவது பற்றி விளக்கினார். சங்கத்தை அடுத்த level-க்கு கொண்டு செல்வோம். ஒரு Model Club- ஆக நிலைக்கச் செய்வோம் என தனது உரையில் கூறினார். சிவகாசி அரிமா சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தூத்துக்குடி அரிமா சங்க நிர்வாகிகள் உறுப்பினர்களுக்கு பரிசுகள் பரிமாறப்பட்டன. மேலும் சிவகாசி அரிமா சங்கத்தினருக்கு அருமையான மதிய விருந்து தூத்துக்குடி அரிமா சங்கத்தில் அறிவிக்கப்பட்டது. தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.




















*Changing The World - IP Dr. PATTI HILL*

# Independence Day Celebration

*Lion. Sudhir Raja*



நமது பள்ளியில் 77 வது சுதந்திர தின கொண்டாட்டம், நாட்டின் சுதந்திர போராட்டத்தை நினைவு கூறும் வகையில், மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கொண்டாடினார்கள்.

நிகழ்வானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது. மாணவர்களின் அணிவகுப்புக்கு பின் நமது சங்கத் தலைவர் லயன். K.பிரபாகர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றினார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள் உரையாற்றினார்கள் மற்றும் மாணவர்களின் தேசபக்திப் பாடல்கள் இந்த வரலாற்று நாளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி வீரர்களின் தியாகங்கள், ஒற்றுமை மற்றும் தேசபக்தியின் மதிப்புகளை பிரதிபலித்தது.



மாணவர்கள் பாரம்பரிய உடை அணிந்து தேசபக்திப் பாடல்களைப் பாடினார்கள். கொடியின் வண்ணங்களில் உடையணிந்து நடனம் ஆடினார்கள். இது பார்ப்பதற்கு சுதந்திர போராட்ட வீரர்களின் ஒற்றுமையை நேரில் பார்ப்பது போல இருந்தது.



Principal, Correspondent மற்றும் நமது சங்கத்தின் President சிறப்புரையாற்றினார்கள். மாணவர்களுக்கு நமது சங்கத் தலைவர் பரிசுகளை வழங்கினார். இந்த கொண்டாட்டங்கள் தேசிய பெருமித உணர்வை வளர்க்கின்றன மற்றும் இளைய தலைமுறையை நமது நாட்டின் வளர்ச்சிக்கு மதிப்பளிக்கவும் பங்களிக்கவும் ஊக்குவிக்கின்றன.

# Unveiling Lions School Activities



**Sports Achievements**

- In the District Level **Badminton** competition conducted by Prides 2k 2023 - Prides 2018 Batch students on 22.07.2023 at The Sivakasi Lions matriculation Hr Sec School, Sivakasi, A Jyotsna & P Gayathri Rakshana of Std VIII was the winner U-14 (D). P S Ragav of Std XII & D Prajeeth Nagarajan of Std X was the winner U-19 (D). S Kirthick Sagar of STd VII & M Kavin Amuthan of Std VIII was got the III place in U-14 (D).
- Yogesh Thalapathy T of Std V made a **World Record** in Nadukhambu Alangara Thodar Suttru in 5 hours with tied legs in Standing Position in **Silambam** Tournament held at SBM College of Engineering and Polytechnic College, Erode on 23rd July 2023, organised by Indian Academy of Silambam and World Arts and Sports Fedration.
- Mohammed Ibrahim Jinnah S of Std IV won the II place in U - 10 (B) category in the District Level **Taekwonda** Tournament on 23rd July 2023 held at Arasan Ganesan Matriculation Hr Sec School, Sivakasi, organized by Asthirak Taekwondo Club, Sivakasi.
- Praiyutha Ragshri R of Std IV won the II place and received Rs 200 cash prizes in U - 10 (G) category in the State Level Open **Badminton** Tournament from 5th August to 7th August 2023 held at Virudhunagar, organized by Kamaraj College of Engineering and Technolgy.
- Adhira SS of Std III won the II place in U - 8 (G) category in the 3rd State **Archery** Championship - 2023 on 12th August held at Madura College, Madurai organized by TamilNadu Indoor Outdoor Archery Association.
- In **Carrom** Tournament was conducted by Sri M Ponnusamy Memorial Carrom Tournament 2023 at Sivakasi Jaycees MHSS on 12.07.2023 & 13.07.2023, R Mukunjith Viswa of Std VI & L Adithya of Std VII got I place in District level U-12 category.

- State level Silambam competition was conducted by World Silambam Sports Association 2023 held at Sivakasi on 30.07.2023, K P Sanghamithra of Std VI got Gold medal U-12 category.

**Achievements in Extra curricular Activities**

- In the softbrain Kids Acadamy National Basic Math and Mental Maths Competition 2023 Conducted through virtual mode on 23rd July 2023, Rithulesh P of Std V got the Ist place in National Level.
- In the World City Cup - 2023 Abacus Mental Arithmetic and Math Competition conducted at Chennai on 30th July 2023, Joel Raja D of Std V got the I place and Rithulesh P of Std V got the II place.
- In Abacus competition conducted by India Pvt Ltd World City Cup on 30.07.2023 at Chennai, K S Shweta of Std IX got the International Level Reginal champion grade.
- International Level Abacus competition was organised by India Private Ltd World City Cup held at Chennai on 30.07.2023, R Sowmiya of Std VII got Gold Prize winner award in Group B.

**Others**



- 70 Hostel Students along with 11 staff went on a one day trip to Kanyakumari and surroundings on 16.07.2023 Sunday.
- 257 students of Std III to V along with the Primary Incharge Mrs B Mercy and 18 teachers visited Heritage Ingredients Show- Pandya Era, in Saiva Vellalar Sangam, exhibited by Mr AK Rajarajan, Sivakasi on Wednesday, 19th July 2023 and gained knowledge about the culture, art and architecture and the life style of pandyas.
- Corresepondent Lion J Ramesh Kumar collected 2 steel library racks for the junior school library from the Lions Club of

Sivakasi 2022 - 2023 Office Beasers on Wednesday, 20th July 2023.



- Guest lecture on the topic “Glimpses of Indian Space Programme” was given by Smt Jeyanthi Rajesh MTech, Group Director of Systems Integration Group, UR Rao Satellite Centre, Indian Space Research Organisation (ISRO) Bangalore & Shri N Rajeswaran MTech MBA, Freelancer, Darnier Aircraft and Automation Products on 21.07.2023.
- Tamil Association meeting was conducted on Friday, 28th July 2023. Mr S Shanmugaraja MA BEd, Vice Principal was the chairperson for the meeting.



- 86 Students of Class IX along with 7 teachers and the Principal went on an educational trip to Keeladi Archaeological site and Kalaignar Centenary Library and Thirupparankundram Murugan Temple, Madurai on 29th July 2023, Saturday.
- Blue day was celebrated by primary students in Senior Campus on 05.08.2023
- Blue Day was celebrated in the Play school and the Junior School on 4th and 5th August 2023 respectively.




**Mr.M.G.PANDIAN** M.A., M.Ed., M.Phil.,
**Principal,**
**The Sivakasi Lions Mat.Hr.Sec.School.**

# ORGAN DONATION PASS ON THE GIFT OF LIFE

*Lion. Dr.Deepthamathi*



Organ donation is the process of giving an organ or tissue to someone else who needs it to survive or improve their quality of life. Organs that can be donated include kidneys, livers, hearts, lungs, pancreas, and eyes.

There are two types of organ donations Living Organ Donations & Deceased Organ Donations.

**Living Organ Donation** is when you retrieve an organ from a healthy living person and transplant it into the body of someone who is suffering from end-stage organ failure.

**Deceased Organ Donations** is when you retrieve an organ from a dead/brain death person.

*Time duration of organs for donation after brain death*

| | | |
|---|---|---|
| Heart & Lungs | - | 4-6 hours |
| Liver | - | 6-12 hours |
| Kidneys | - | upto 30 hours |
| Intestine | - | 6 hours |
| Pancreas | - | 6 hours |
| Cornea (eyes) | - | 6 hours |

By law in India, organ and tissue donation cannot take place without the written consent of the donor's family.

There is no bar to organ donation and one or the other organ or tissues can be donated at any age. The only people **who cannot donate** organs are those have/had cancer, HIV

or disease-causing bacteria in the bloodstream or body tissues.

**According to a survey in India**,

1. Every day, 22 people die while waiting for a transplant.

2. There are over 5 lakh people waiting for an organ transplant.

3. Further, 150,000 people await a kidney transplant, but only 5,000 get among them.

**How to become an organ donor?**

1. There are two ways to donate organs: -
   a) By pledging for organ donation when a person is alive
   b) By consent of family after death.
2. During lifetime, a person can pledge for organ donation by filling up a donor form in the presence of two witnesses, one of whom shall be a near relative.
3. If your request is accepted, a Donor Card with a registration number will be sent to your official address.
4. Once a person becomes a donor, they should share this decision with their family and friends.

The organ donor form could be obtained from **ORBO** either personally or through mail. Some websites that allow you to become organ donors include **National Organ and Tissue Transplant** (NOTTO), **Regional Organ and Tissue Transplant Organization** (rotto).

World Organ Donation Day is a global event that is observed every year on August 13 to focus on the need for organ donation and to celebrate the lives of organ donors and recipients as well as to educate people about organ donation.

The theme for World Organ Donation Day 2023 is **“Step up to volunteer; need more organ donors to fill the lacunae”.**

**EYE DONATION**

You can call your nearest Eye Bank and pledge to donate your eyes. List of eye banks are available in all eye hospitals. You will be provided with an Eye Donation Card.

After the donor dies call the central eye bank number or that of an eye bank near where you live and they will come and take the corneas with the least amount of hassle for the family. The whole process takes 5-10 minutes.

These are some important things to take care of in order to make a successful eye donation after death.

1. Call the nearest eye bank within six hours of death.
2. Switch off the fans and keep AC on if possible
3. Close the eye lids and keep a moist cloth over the eyes.
4. The head should be slightly raised with a pillow to lessen the incidence of bleeding during the removal of the eyes.
5. Keep on your phone the addresses & phone numbers of your nearest eye bank. See attached document for Eye Banks across India.

Eye removal leaves no visible signs that would interfere with common funeral practices.

Our lions club foundation at Chennai has an **LIONS EYE BANK TRUST RESEARCH FOUNDATION** which works for the welfare of providing eyesight to many visually challenged individuals.

"If something comes to life in others because of you, then you have made an approach to immortality." -Norman Cousins.

# The Art of Giving

*Mrs.Sadhana Dharmaraj*



நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் லயன். K.S.S.P.தனசேகரன் அவர்களின் மகளும், லயன். ஜோதிபாய் அவர்களின் மருமகளுமான Mrs.Sadhana Dharmaraj அவர்கள் Child Guidance Speech Theraphy Centre & Child Guidance Academy-ஐ நடத்தி வருகிறார். அவருடைய சிறப்புரை...

"இரண்டு குழந்தைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அகாடமி தற்போது Service கொடுக்க முடியாத அளவிற்கு, நிறைய குழந்தைகள் இருக்கிறார்கள். இந்த வளர்ச்சி மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயமாக உள்ளது அருப்புக்கோட்டை, விருதுநகர், சாத்தூர், ராஜபாளையத்தில் இருந்து குழந்தைகள் சிகிச்சைக்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணியாக அமைவது நாம் உபயோகிக்கும் Mobile Phone மட்டுமே. இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு Mobile Phone கொடுக்க வேண்டாம். அந்த ஒரு காரணத்தினால் மட்டுமே குழந்தைகள் இந்த நிலைமைக்கு தள்ளப்படுகிறார்கள். இந்த awarness-ஐ அனைவருக்கும் தெரியப் படுத்த வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் பேசிக்கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் குளிக்கும் போதும், உணவு உண்ணும் போதும், பல புதிய வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

கொடை என்பது பணத்தால் வருவது இல்லை, மனதால் வருவது தான். கொடையாக பணத்தை மட்டும் தான் கொடுக்க வேண்டும் என்பது இல்லை. ஒரு சிறிய புன்னகை மற்றும் ஊக்குவிக்கும் வார்த்தைகள் கூட ஒரு கொடையே. நாம் எதை கொடுக்கின்றோமோ அதை நாம் மனமகிழ்ச்சியுடன் இன்றே கொடுக்க வேண்டும்.

நாம் நமது குழந்தைகளுக்கும் சேவை உணர்வை சிறு வயதில் இருந்தே ஊட்ட வேண்டும். அவர்களுக்கு நாம் செய்யும் சேவையைப் பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

சேவை என்றவுடன் நம் நினைவிற்கு வருவது மதர்தெரசா தான். அவரைப் போன்றே சேவை உள்ளம் கொண்ட பலர் இருக்கின்றார்கள். மதுரையில் உள்ள நாராயண கிருஷ்ணமூர்த்தி

(அட்சயா ட்ரஸ்ட்) ஒரு Chef. இவருக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்தும் அதை ஏற்காமல் நமது ஊரில் பசியில் வாடுபவர்களுக்கு சேவை செய்வதை லட்சியமாக எடுத்துக் கொண்டார்.

சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் லயன் குமரவேல்கனி Auditor அவர்கள் மனமகிழ்வுடன் சேவையாற்றிய Keller Adopt sensor therapy kit இங்குள்ள குழந்தைகளுக்கு treatment கொடுக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

## ✶ லட்சிய நாயகன்! ✶

*Lion Amarjyothy*



*வாழ்வில் எளிமையும் கையில் தூய்மையும் கொண்டவர்!*
*பேச்சில் இனிமையும் செயலில் நேர்மையும் உடையவர்!*
*அறிவில் கூர்மையும் லட்சியத்தில் வலிமையும்கொண்ட மகான்!*
*உலக அரங்கில் குனிந்த இந்தியாவை நிமிரச் செய்தவர்!*
*ஏவுகணையால் உலகை ஆச்சரியத்தில் மூழ்கடித்த*
*இந்திய நாயகன்!*
*இளைஞர் இதயங்களில் நம்பிக்கை விதைகளை*
*தூவி கனவு காணச் சொன்னவர்!*
*பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் இந்தியாவிற்கு வலிமை ஊட்டியவர்!*
*பொதுநல நோக்கில் தன்னலம் மறந்த தியாகச் செம்மல்!*
*வாழ்வோருக்கு வாழ்வியல் பாடத்தை வைத்துப்போன ஆசான்!*
*பணங்களை நோக்காமல் மனங்களை நேசித்த அன்பின் ஆலயம்!*
*அரசுப்பள்ளியில் பயின்று அரசை வல்லரசாக்கிய லட்சிய நாயகன்!*
*காலங்களின் கைகளில் என்றென்றும் தவழும்*
*ஞான்குழந்தை!*
*காலந்தோறும் வரலாறுகளே படிக்கத்துடிக்கும்*
*அரிய பொக்கிஷம்!*
*மரித்தும் மனங்களில் வசிக்கும் வசீகரன் பிரிக்க*
*முடியாத பிரியம்!*



ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

# Miniature Motivational Story
# யாருக்கு உதவ வேண்டும்



ஒரு நாள் வயதான ஒருவர் கடல் அருகில் நடந்து சென்று கொண்டிருந்தார். அங்கு ஒரு சிறுவன் மணலில் இருந்து எதையோ எடுத்து கடலுக்குள் தூக்கிப் போடுவதைப் பார்த்தார். அவன் அருகில் சென்று பார்த்தபோது தான் தெரிந்தது. அவன் தூக்கிப்போவது கடலுக்குள் இருந்து வெளியே வந்து கரையில் மாட்டிக்கொண்ட நட்சத்திர மீன் என்று.

உடனே அந்த சிறுவனிடம் என்ன செய்கிறாய் என்று கேட்டார், அதற்கு அந்த சிறுவன் இந்த நட்சத்திர மீன் எல்லாம் கரையில் இருந்தால் சூரிய வெளிச்சம் பட்டு சீக்கிரமாகவே இறந்துவிடும். அதனால் அதை எடுத்து மீண்டும் கடலுக்குள் விடுகின்றேன் என்றான்.

அதற்கு அந்த பெரியவர் கரையில் நிறைய நட்சத்திர மீன் இருக்கின்றது. அவை அனைத்தையும் உன்னால் மறுபடியும் கடலுக்குள் தூக்கிப்போட முடியாது. ஒரு சில நட்சத்திர மீனை மட்டும் கடலுக்குள் தூக்கிப்போமுவதால் எந்த பயனும் இல்லை என்றார். உடனே சிறுவன் கீழே குனிந்து ஒரு நட்சத்திர மீனை கையில் எடுத்து இந்த நட்சத்திர மீனுக்கு அது உபயோகமாக இருக்கும் என்று செல்லி அந்த நட்சத்திர மீனை மறுபடியும் கடலுக்குள் தூக்கி எறிகின்றான்.



உடனே அந்த பெரியவர் தானும் குனிந்து ஒரு நட்சத்திர மீனை கையில் எடுக்கிறார். தன்னால் ஒரு உயிரினத்தைக் காப்பாற்ற முடிகின்றது என்ற மனநிறைவோடு அதை மீண்டும் கடலுக்குள் தூக்கிப்போடுகின்றார். இருவரின் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது.

நாமும் நமது அருகில் இருக்கும் வறியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி இந்த உலகில் இன்பமாய் வாழ வழி செய்வோம்.

# Rebus Puzzle

Rebus Puzzle is a riddle made up of letters, Pictures and symbols whose names souda like the syllables and words of phrasa sentence. It's a challenging puzzle that stimulates our thinking. ex : $ICE^3$ - Ice cube, Vice + Vice = Advice




Answer : Page 54

# Birthday Wishes

*The members of our Lions Club wishing you that…*

*May love and laughter light your days*

*And warm your heart and home;*

*May good and faithful friends be yours*

*Wherever you may roam;*

*May peace and plenty bless your world*

*With joy that long endures;*


*May all life's passing seasons*

*Bring the best to you and yours!*

*Happy birthday to you and*

*May God bless you!*





Lion A.Prahaspathy
04.08.1945



Lion R.Ananda Rajan
06.08.1964



Lion G.Partha Sarathy
10.08.1957



Lion Vennila Paulraj
12.08.1976



Lion Mallika Ramesh
14.08.1969



Lion T.Sanjeevi Babu
15.08.1964



Lion R.C.P.Raju
18.08.1972



Lion D.Prabakaran
19.08.1977



Lion Sindhuja Vignesh
19.08.1986



Lion Varsha Adhedheeran
22.08.1997



Lion D.A.Sudharshanan
23.08.1960



Lion Asha Devi Sri Ram Ashok
26.08.1966



Lion K.Prabakar
27.08.1965



Lion E.A.E.T.S.Janagaraj
30.08.1956

**Birthday Riddle**

**Why did a man born in November celebrate his birthday in the Summer?**

**Answer : He is Autralian, where the three hottest summer months are December, January and February**

# Wedding Anniversary Wishes

## *Recipe for a Happy Marriage*

*Ingredients :*

| | |
|---|---|
| 4 cups of Love | 2 cups of Loyalty |
| 3 cups of Forgiveness | 1 cup Friendship |
| 5 spoons of Hope | 2 spoons of Tenderness |
| 4 quarts of Faith | 1 barrel of Laughter |

*Preparation:*

*Take Love and Loyalty, mix them thoroughly with faith. Blend it with tenderness, kindness and understanding. Add friendship and hope, sprinkle abundantly with laughter. Garnish with clutch*

*and snogging. Serve daily with generous helpings.*

*Following this recipe, our Lions Club successful couples celebrate their wedding anniversary in August:*

| | | |
|---|---|---|
| 1. | லயன் குணசேகரன் – லயன் சித்ரா | 17.08.1969 |
| 2. | லயன் சந்திரபிரகாஷ் – வாணி | 19.08.1981 |
| 3. | லயன் பார்த்தசாரதி – சாந்தி | 20.08.1982 |
| 4. | லயன் ஸ்ரீராம் அசோக் – லயன் ஆஷா தேவி | 21.08.1983 |
| 5. | லயன் பாலசுப்பிரமணியன் – லயன் கவிதா | 24.08.2014 |
| 6. | லயன் வைரப்பிரகாசம் – லயன் மீரா | 25.08.1960 |
| 7. | லயன் டென்சிங் – லயன் திருச்செல்வி | 26.08.1979 |
| 8. | லயன் அசோக்குமார் – லயன் திருமகள் | 29.08.1982 |
| 9. | லயன் செந்தில் வேலவன் – லயன் கோதை | 30.08.1992 |



**Lion Deepa Arunkumar**

**Greeter Committee Chairperson 2023-24**



## Answer for Puzzle

1. Split Personality
2. Misunderstood
3. Robinhood
4. History Repeats
5. One in a Milion
6. Summary
7. High Chair
8. Space invaders
9. Slow Down
10. Stand in the Corner
11. Double Vision
12. Walking on the Ice
13. Looking Backward
14. Space Programe
15. Once Upon a time
16. Broken Promise
17. Shirinking Violets
18. Upside Down Pinapple Cake
19. Back Door
20. Get a Word in Edge
21. Cross Country
22. Apple pie
23. 6 Feet Under Ground
24. Half Baked
25. Unfinished Business

# வாழ்த்துரை

இதயம் நிறை அன்பு கொண்ட இதழாசிரியர் தீபலக்ஷ்மி சுதாகரன் அவர்களுக்கு நாகர்கோவில் பிடிஜி. லயன் டாக்டர். எஸ்.ஆர் - ன் வணக்கம்.

அட்டைப்படம் கண்களில் ஒற்றிக் கொள்ளும் படைப்பு. இதழின் மணி மகுடமும் அதுதான். முத்தலைவர்கள் பக்கங்கள் தொடர்ந்து சூப்பர், சங்க பொறுப்பாளர்கள் என எடுத்துச் சொல்கிறது. புகைப்படங்கள் நிகழ்வுகளை உடனிருந்து பார்த்தது போல் காட்டுகின்றன.

தங்கள் பக்கத்தில் சிறு சிறு அலைகள் தான் மகிழ்வு தருபவை என மிக சிறப்பாக சொல்லியுள்ளீர்கள். சேவையால் இதயத்தை தொட்ட உங்கள் சங்கத்தின் சிங்கங்களின் அருமையான சிறந்த சிந்தனை தொடர்ந்து வரும் என நம்புகிறேன். Lion Vinoth Kannan MJF, International Convention Highlights-ல் கலந்து கொண்ட உணர்வை ஏற்படுத்துகிறார்.

லயன் மகேசன் கட்டுரை நயம். Service to humanity is service to god (Lion. Radhika Devi) பயனுற படைத்துள்ளார். எது சொர்க்கம், எது நரகம் அமர்க்களம். காமராஜர் பிறந்தநாள் by Lion.Sudhakaran நல்ல தகவல். மொத்தத்தில் உங்கள் கை வண்ணத்தில் உங்கள் சங்க சஞ்சிகை மின்னுகிறது தங்கத்தைவிட பொலிவுடன்

வாழ்த்துவது, வாயல்ல இதயம்.

இப்படிக்கு,

நாகர்கோவில் டாக்டர். எஸ்.ஆர்.எம்பிபிஎஸ்., டி.லிட்

(சமூக சேவைக்காக)

---

Lions Club of Sivakasi முத்தலைவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாதந்தோறும் சங்கத்தில் இருந்து வெளியாகும் புல்லட்டின் நாளிதழ் மிக அருமையாக உள்ளது. இந்த நாளிதழில் சங்க நிகழ்வுகள் மற்றும் மாவட்ட நிகழ்வுகள் அனைத்தும் அருமையான முறையில் பதிவாகி உள்ளது. மேலும் உங்களுடைய சேவை தொடர என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்...

இப்படிக்கு,

Lion.M.Stepen MJF

உங்கள் வட்டாரத்தலைவர்